

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியக் கழக பாக முகவர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில ஒன்றிய கழக செயலாளர் டி. குமார் முன்னிலை வகித்தார். இக் கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் ஆலோசனை வழங்கினார். ஒன்றிய கழக, மாவட்ட நிர்வாகிகள், என். எஸ் ரவி, பி.வி. பாலமுருகன்,ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன் , எஸ்.ஆர்.வெங்கடேசன், பெ மணி, கோ. சிவராமன், கார்த்திகேயன், முரளி, மகளிர் அணி ரத்தினமாலா, க.வெங்கட்ராமன் மற்றும் பாக முகவர்கள் கலந்து கொண்டனர்,

### மதுரை மாவட்டக் கழகம் சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## விமான நிலையத்தில் அமைச்சர் பி.மூர்த்தி – மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி – மு.மணிமாறன் தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!

மதுரை, நவ. 10–

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் முன்னிலையில் மதுரை மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் இரு வண்ணக் கொடி ஏந்தி உற்சாகம் மிகுந்த வரவேற்பு கொடுத்தார்கள், அதன் விபரம்:–

கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாவட்டங்கள் முழுவதும் அரசின் நலத்திட்டங்கள் செயல்பாடுகள் குறித்து ஆய்வுப் பணி மேற்கொள்வதாக அறிவித்து முதற்கட்டமாக கோவை மாவட்டத்தில் துவங்கினார்.

அடுத்ததாக விருதுநகர் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள திட்டமிட்டு சென்னையிலிருந்து விமான மூலம் மதுரை விமான நிலையம் வந்தடைந்தார். அவ்வாறு வந்த கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட திமுக சார்பில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தினர் இரு வண்ணக் கொடி மற்றும் வரவேற்பு பதாகைகளுடன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க, கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்க, இளந்தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்க என விண்ணை முட்டும் கோஷங்கள் எழுப்பியவாறு உற்சாகம் மிகுந்த வரவேற்பு கொடுத்தார்கள்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மதுரை மாநகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

### மாநில அளவிலான ஓவிய- சிற்பக் கலைக்காட்சி நடத்தி, 50 சிறந்த கலைப்படைப்புகள் வழங்கும்

# கலைஞர்களுக்கு பரிசுத் தொகை - பாராட்டு சான்றிதழ் வழங்குதல்!

## தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.10

கலை பண்பாட்டுத்துறை, நுண்கலைப்பிரிவில் உள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவிலான ஓவிய சிற்பக் கலைக்காட்சியினை (மரபுவழி / நவீனபாணி பிரிவில்) தொடர்ந்து நடத்தி, சிறந்த கலைப்படைப்புகள் வழங்கும் கலைஞர்களுக்கு பரிசுத்தொகையும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி வருகிறது.

அவ்வகையில் 2024-2025-ஆம் நிதியாண்டில் மாநில அளவிலான ஓவியசிற்பக் கலைக் காட்சி நடத்தி, ஓவியக்கலை பிரிவில் (மரபு வழி / நவீன பாணி) சிறந்த கலைப்படைப்புகள் வழங்கும் 36 வயதிற்கு மேற்பட்ட 15 மூத்தக் கலைஞர்களுக்கு தலா ரூ.20,000/ வீதமும், 35 வயதிற்குட்பட்ட 10 இளங்கலைஞர்களுக்கு தலா ரூ.10,000 /வீதமும், சிற்பக்கலை பிரிவில் (மரபுவழி / நவீன பாணி) சிறந்த கலைப்படைப்புகள் வழங்கும் 36 வயதிற்கு மேற்பட்ட 15 மூத்தக் கலைஞர்களுக்கு தலா ரூ.20,000/ வீதமும், 35 வயதிற்குட்பட்ட 10 இளங்கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/வீதமும் என 50 கலைஞர்களுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பில் பரிசு தொகையும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளது.

2024-2025-ஆம் நிதியாண்டில் மாநில அளவிலான ஓவியசிற்பக் கலைக்காட்சியினை நடத்திட ஏதுவாக, முதற்கட்டமாக தமிழ்நாட்டினை சேர்ந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களிடமிருந்து ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் புகைப்படங்கள் பின்வரும் விதிமுறைகளின்படி வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் கலை பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் (www.artandculture.tn.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஓவிய, சிற்பக் கலைக்காட்சியில் கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்கள் தங்களின் புகைப்படத்துடன் (Passport Size Photo) கூடிய தன்விவரக் குறிப்புடன் (பெயர், பிறந்த தேதி, கலைப்பிரிவுகளில் பெற்றுள்ள கல்வித் தகுதிகள், படைப்பின் தலைப்பு, படைப்பின் பெயர், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன்) ஓவியங்கள்/ சிற்பங்களின் (10 x 12 Size) இரண்டு புகைப்படங்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

கலைஞர்கள் மரபுவழிப் பிரிவிலோ அல்லது நவீனபாணி பிரிவிலோ என ஏதேனும் ஒரு பிரிவில் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

1.1.2024 க்கு பின்னர் கலைப் படைப்பு (ஓவியம் / சிற்பம்) உருவாக்க / படைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கலை பண்பாட்டுத்துறையின் வாயிலாக கலைச்செம்மல் விருது பெற்றவர்கள், கடந்த ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கக் கூடாது. தமிழ்நாட்டினை சேர்ந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் மட்டும் இதில் பங்குபெறுதல் வேண்டும். ஆதார் அடையாள அட்டை நகல் இணைத்தல் வேண்டும்.

ஓவியர்கள் மற்றும் சிற்பி களிடமிருந்து பெறப்படும் புகைப்படங்களில் இருந்து , கலை பண்பாட்டுத்துறையால் அமைக்கப்படும் தெரிவுக்குழுவின் மூலம் சிறந்த புகைப்படங்கள் மாநில அளவிலான ஓவியசிற்ப கலைக்காட்சிக்கு தெரிவு செய்யப்பட்டு, தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் உரிய விவரங்கள் இவ்வலுவலகத்தினால் தெரிவிக்கப்படும். அதன் பின்னர் அசல் ஓவியப் படைப்புகளும், சிற்பங்களும் பெறப்பட்டு கலைக்காட்சியில் வைக்கப்படும். கலைக் காட்சிக்கு வைக்கப்படும் அசல் ஓவிய, சிற்ப படைப்புகளில் சிறந்த 50 கலைப்படைப்புகள் தெரிவுக்குழுவால் பரிசுக்கு தேர்வு செய்யப்படும்.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் உரிய தன் விவரக்குறிப்புடன் ஓவியங்களின் / சிற்பங்களின் புகைப்படங்களை பின்வரும் முகவரிக்கு 30.11.2024 க்குள் அனுப்பி வைக்க கலைஞர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர், கலை பண்பாட்டுத்துறை, தமிழ் வளர்ச்சி வளாகம், இரண்டாம் தளம், தமிழ்ச் சாலை, எழும்பூர், தொலைபேசி எண்.2 8193195, 28192152

இவ்வாறு அரசு செய்தி வெளியிட்டுள்ளது.

### திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் இன்று நடைபெறுகிறது!

# வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், நவ.10

திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் இன்று 10-ஆம் தேதி மாலை 3 மணியளவில் திருப்போரூர், காலவாக்கம் கணேஷ் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர் - ஊராட்சி ஒன்றிய குழுத்த லைவர் எஸ்.ஆர். எல்.இதயவர்மன் இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார்.

மாவட்ட பொருளாளர் வே.விஸ்வநாதன், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய செயலாளர் வி.தமிழ்மணி மற்றும் திருக்கழுக்குன்றம் பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் எம்.சேகர் வரவேற்று பேசுகிறார்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கா.செல்வம், திருப்போரூர் தொகுதி பார்வையாளர் - மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் சி.தசரதன், தலைமை செயர்குழு உறுப்பினர் ஜி.சி. அன்புச்செழியன், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய குழுத் த லைவர் ஆதி.அரசு, மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் காயத்ரி அன்புச்செழியன், ஊராட்சி ஒன்றிய குழுத்த லைவர் சத்தியா சேகர், எஸ்.ஏ. பச்சையப்பன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு. செல்வக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஈ.விஜையக்குமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பா.ஞானப்பிரகாசம், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பா. கோவிந்து, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சா.சசிக்கலா, பேரூர்ராட்சி துணைத்தலைவர்கள் வி.அருள்மணி, வா.பரசுராமன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய - பேரூர் நிர்வாகிகள் - வாக்குச் சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் - கழக அணிகளின் ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக செயல்வீரர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்கி ன்றனர். முடிவில் திருப்போரூர் பேரூர் - செயலாளர் - பேரூராட்சித் தலைவர் மு.தேவராஜ் நன்றியுரை ஆற்றுகிறார்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக

# வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



வருகிற 2026-சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்வதற்காக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) கலந்தாலோசனைக் கூட்டம், கீழ்க்கண்ட தேதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கீழ்காணும் விவரம்படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 10.11.2024 ஞாயிறு | காலை 9.00 மணி | ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி | சக்தி பேலஸ் திருமண மண்டபம், பரணிபுத்தூர் |
| | மாலை 4.00 மணி | திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி | கணேஷ் மகால் திருமண மண்டபம், காலவாக்கம், திருப்போரூர் |
| 15.11.2024 வெள்ளி | காலை 9.00 மணி | செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி | ஆழ்வார் பேலஸ் திருமண மண்டபம், மறைமலை நகர் |
| | மாலை 6.00 மணி | திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி | கல்யாணி திருமண மண்டபம், மாங்காடு |
| 22.11.2024 வெள்ளி | மாலை 4.00 மணி | பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், 200– அடி ரேடியல் சாலை, பல்லாவரம் |
| 23.11.2024 சனி | மாலை 4.00 மணி | தாம்பரம் சட்டமன்றத் தொகுதி | ------ |

சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெறும், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) கூட்டங்களை, மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், இணைந்து சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சடித்து அந்தந்த சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் அடங்கிய வட்ட - கிளைக் கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் -வாக்குச்சாவடி நிலை முகவர்கள் - வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவருக்கும் முறையாக அழைப்பிதழை தந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து, இந்த 6-சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டங்களை மிகவும் எழுச்சியான முறையில் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் 233ஆவது ஆய்வை அரக்கோணம் தொகுதியில் மேற்கொண்டார். அரக்கோணம் பெருமூச்சி பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி, ஆசிரியப் பெருமக்களுக்கு அமைச்சர் வாழ்த்துகள் தெரிவித்தார்.

### மேயர் பிரியா - கலாநிதி வீராசாமி எம்.பி. - தாயகம்கவி எம்.எல்.ஏ.- கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

# திரு.வி.க.நகர் 71-வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

## செ.தமிழ்வேந்தன் முன்னிலை! வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ் பாபு அறிக்கை

சென்னை, நவ. 10 -

71-வது வட்டக் கழகக்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இது குறித்து வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ் பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 71வது வட்ட கழக பாக முகவர்கள் கூட்டம் இன்று ( 10-11- 2024- ஞாயிறு) மாலை 5.00 மணியளவில் வசந்த மாளிகை மண்டபம் 169/56, படேல் சாலை, பெரம்பூர், சென்னை, 600011 எனும் முகவரியில் வட்ட அவைத் தலைவர் தா.வே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் , மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராஜன், பகுதி துணைச் செயாளர் பெரம்பூர். ஆர்.ராஜன், பகுதி அவைத் தலைவர் தில்லை. கதிரவன் பகுதி துணைச் செயலாளர் புல்லட் கி.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு சிறப்பு ரையாற்று கிறார். இதில் மேயர் பிரியா ராஜன், Dr.கலாநிதி வீராசாமி எம்.பி., (கழக அயலக அணி தலைவர்), ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ., (கழக அமைப்பு துணைச் செயலாளர்), கிருஷ்ணமூர்த்தி (தொகுதி பொறுப்பாளர்) ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

க்கூட்டத்தில் 71வது வட்டக்குழுவிற்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக செயவீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் . பொருள்: பாக முகவர்கள் கூட்டம்,

இவ்வாறு 71-வது வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அ.ம.துரை வீரமணி முன்னிலை! இரா.வினோத் எம்.சி. தலைமையில்

# அயப்பாக்கம் ஊராட்சியில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை !

## ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ.- காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு !

சென்னை நவ.10

கழக இளைஞரணி செயலாளர்,தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியம் அறிவுறுத்தலின்படி

இன்று (10.11.2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அய்யப்பாக்கம் ஊராட்சியில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் எம்.சி. தலைமையில்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர், அய்யப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அய்யப்பாக்கம் அ.ம.துரைவீரமணி மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் எம்.சி., ஆகியோர் முன்னிலையில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை நடைபெறவுள்ளது.

அதுபோது ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க. செந்தில் குமார்,எஸ்.பி. முரளிகிருஷ்ணன், பி. மணீஷ், எம்.சபரி ராஜா, எஸ்.ஜனார்த்தனன் உள்ளிட்ட கிளை இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் இளைஞரணி தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

# மாங்காடு நகர தி.மு.க. செயற்குழு அவசர கூட்டம்!

## பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

மாங்காடு, நவ. 10 -

மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

மாங்காடு நகர அவைத் தலைவர் எம்.எஸ்.மகேந்திரன் தலைமையில் அவசர செயற்குழு கூட்டம் இன்று (10.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணியளவில், நகர தி.மு.க. அலுவலகம் மாங்காடு நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள் , BLA2 பொறுப்பாளர்கள், இளைஞர் அணி மற்றும் மாணவரணி தோழர்கள், மகளிரணி சகோதரிகள், என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: வரும் 15.11.2024 வெள்ளிக்கிழமை அன்று தொகுதி செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் கல்யாணி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது மற்றும் வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் மற்றும் கழக வளர்ச்சி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மயிலை த.வேலு - ஜெ.கருணாநிதி பங்கேற்பு!

# 131வது வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் வேண்டுகோள்!

சென்னை, நவ.10-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட செயற்குழுக் கூட்டம் இன்று (10.11.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு வட்ட கிளைக் கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை தவேலு எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, எம்.சி., தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர், தியாகராயர்நகர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எஸ்.பத்மபிரியா, பகுதி அவை தலைவர் மு.மணிவண்ணன் மற்றும் 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கோமதி மணிவண்ணன் எம்.சி. ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

ஆகையால் கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரிதிநிகள், பாக பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல், வாக்காளர் சேர்ப்பு முகம், கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு 131வது வட்ட செயலாளர் மு.ம. செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஜார்கண்ட் மாநில முதல்வர் சிபு சோரனின் தனிச் செயலாளர் வீடு உள்ளிட்ட 9 இடங்களில், வருமானவரித் துறையினர் சோதனை நடத்தி இருக்கிறார்களே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அந்த மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல் அடுத்த வாரம் தொடங்குகிறது. வருமானவரித் துறை சோதனை எதற்காக என்பது ஜார்கண்ட் மாநில வாக்காளர்களுக்குப் புரியாதா என்ன ? வருமானவரித் துறை, ஒன்றிய பா.ஜ.க.வின் கூட்டணியில் சேர்ந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டனவே ! இம்மாதிரி சலசலப்புக்கெல்லாம் சிபுசோரனும், அவரது கட்சியும் கொஞ்சமும் அஞ்சாது !**